# பத்திரிகைச் செய்தி

2016-2017ம் கல்வியாண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வை நிறைவு செய்த மாணவர்களின் நலன்கருதி இடைநிற்றல் இல்லாத உயர்படிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வேலைவாய்ப்பு அமைந்துள்ள துறைகளை தேர்வு செய்வது சார்பாக மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனை கருத்தரங்கு வழிகாட்டல் (Career Guidance and Counseling) என்ற பயிற்சி தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி கன்னியாகுமரி மாவட்டத்தில் 06.04.2017 மற்றும் 07.04.2017 ஆகிய இரு தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை ஆறு மையங்களில் நடைபெறுகிறது.

06.04.2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜான் சிங் ஆர். சவான் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் சுங்கான்கடை வின்ஸ் பொறியியல் கல்லூரியில் துவங்கி வைக்கிறார்கள். அதனைத்தொடர்ந்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பளர் திரு. ஜி. தர்மராஜன் ஐ.பி.எஸ். அவர்கள் நாகர்கோவில் பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரியிலும், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக டீன் திரு. எஸ்.ஜி. பிரகாஷ் வின்செண்ட் அவர்கள் கருங்கல் பெத்லேகம் பொறியியல் கல்லூரியிலும் தலைமையேற்று துவங்கி வைக்கின்றனர்.

07.04.2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜான் சிங் ஆர். சவான் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் ஆற்றூர் மரியா பொறியியல் கல்லூரியில் துவங்கி வைக்கிறார். அதனை தொடர்ந்து துணை மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் திரு. சகாய ஜோஸ் அவர்கள் படந்தாலுமூடு கிரேஸ் கல்வியியல் கல்லூரியிலும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. இரா. எலிசபெத் அவர்கள் நாகர்கோவில் பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரியிலும் தலைமையேற்று துவங்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கல்வியினால் உயர்வு பெற்ற மருத்துவர்கள், பொறியாளர்கள், வங்கி மேலாளர்கள், வழக்கறிஞர்கள், மென்பொறியாளர்கள், பட்டய கணக்கறிஞர்கள், பேராசிரியர்கள், வேளாண்மை பொறியாளர்கள், பாதுகாப்பு படையில் உள்ள முப்படை சார்ந்த அலுவலர்கள், ஆடை மற்றும் பின்னாலாடை வடிமைப்பாளர்கள், கட்டிட கலை வல்லுனர்கள், பனைப்பொருள்கள் துறை சார்ந்த துறை வல்லுனர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த வல்லுனர்கள் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனை வழங்க இருக்கிறார்கள். எனவே 10 மற்றும் 12-ம் வகுப்பினை நிறைவு செய்த மாணவ மாணவிகள் தவறாமல் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்நிகழ்ச்சியானது கீழ்கண்ட மையங்களில் ஒன்றிய வாரியாகவும் கல்வி மாவட்ட வாரியாகவும் நடைபெறுகிறது.

| பிரிவு | நடைபெறும் இடம் | நாள் |
|---|---|---|
| அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் | பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரி நாகர்கோவில் | 06.04.2017 |
| இராஜக்கமங்கலம் ஒன்றியம்<br>குருந்தங்கோடு ஒன்றியம்<br>தக்கலை ஒன்றியம் | வின்ஸ் பொறியியல் கல்லூரி<br>சுங்கான் கடை | 06.04.2017 |
| கிள்ளியூர் ஒன்றியம் | பெத்லேகம் பொறியியல் கல்லூரி<br>கருங்கல் | 06.04.2017 |

| பிரிவு | நடைபெறும் இடம் | நாள் |
|---|---|---|
| தோவாளை ஒன்றியம் | பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரி நாகர்கோவில் | 07.04.2017 |
| திருவட்டார் ஒன்றியம் | மரியா பொறியியல் கல்லூரி<br>ஆற்றூர் | 07.04.2017 |
| மேல்புறம் ஒன்றியம்<br>முஞ்சிறை ஒன்றியம் | கிரேஸ் கல்வியியல் கல்லூரி<br>படந்தாலுமூடு | 07.04.2017 |

இது தொடர்பாக கீழ்க்கண்ட ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொள்ளலாம்.

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

1. திரு. ஆர். இராதாகிருஷ்ணன், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (இடைநிலை), 9443328882

2. திரு. எஸ். காட்வின், முதல்நிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், தேரூர், 9976351501

3. திருமதி. எஸ். மலர்விழி, முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, செண்பகராமன்புதூர், 7373477766

4. திரு. வி.எல். பெனின் தேவகுமார், பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, இருளப்பபுரம், 9442162571

5. திரு. எஸ். சுரேந்திரன், கணினி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, மாதவலாயம், 9486757471

முதன்மைக்கல்வி அலுவலர்

நாகர்கோவில்